## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 49/2016 |
| Deposition of witness for | Prosecution wit. PW.9 |
| Name | செல்லத்துரை |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 24-11-2022

<u>முதல்விசாரணை</u>

1.நான் தற்போது காவல் துறையில் பணியாற்றி தற்போது ஒய்வில் இருந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 28.06.2015 ம் தேதியன்று திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற விபத்து குறித்த தகவலின் பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த அன்பரசி என்பவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பெற்று மேற்படி புகார் வாக்குமூலம் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.149/2015 u/Sec. 279, 337, 304(A) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன்.

2. அதன் அசல் நகலை கனம் JM அவர்களுக்கு அனுப்பி வைத்தும் இதர நகலை சம்மந்தப்பட் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 5** ஆகும். ஆய்வாளர் வசம் நகல் ஒப்படைத்தும் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல் நிலையத்தில் இருந்து 1 கிமீ துாரத்தில் அமைந்து உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடனே விபத்து தொடர்பான செய்தி காவல் நிலையத்திற்கு தெரியும் என்றால் தெரியும்.

4.முதல் தகவல் அறிக்கையில் 3(b) காவல் நிலையத்திற்கு தகவல் தெரிந்த நாள் நேரம் 28.06.2015 18.00 மணி என்பதற்கு முன்னதாகவே தகவல் தெரியும் என்றால் சரிதான்.

5. காலம் எண். 8 ல் காலத்தாமதமாக வழக்கு பதிவு செய்வதற்கு TVMC மருத்துவமனை சென்று இண்டிமேசன் பெற்று என்பது பொய்யாக குறிப்பிடபட்டு உள்ளது என்றால் சரியல்ல.

6. TVMC மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று பாளையங்கோட்டை TVMC மருத்துவமனைக்கு சென்றேன் என்று நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு உள்ள தகவல் என்பது என்ன என்று உறுதியாக கூறமுடியாது என்றால் சரிதான்.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் TVMC மருத்துவமனையில் இருந்து தகவலை பெற்று மேறப்படி காவல்நிலையத்திற்கு சென்று இண்டிமேசன் பெற்று காயம்பட்ட நபரிடம்

வாக்குமூலம் வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. மேற்படி வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் சமயத்தில் ஆய்வாளர் காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரிதான்.

9. அன்று நான் காவல் ஆய்வாளரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதன் பிறகு ஆய்வாளர் என்னிடம் வழக்கு தொடர்பாக என்னிடம் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.